**தேதி :** 19.05.2026 SC.No. : 539/2025 **PW :1** பரமசிவன்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சம்பவம் நடந்த இடத்திலிருந்து தென்காசி காவல்நிலையம் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும். சம்பவம் நடந்தவுடன் நான் காவல்நிலையம் சென்றேனா? என்றால் வண்டியை ஓரமாக நிறுத்தி விட்டு கல்லை எறிந்த நபரை தேடி பார்த்தேன். பின்னர் காவல்நிலையம் சென்றேன். எதிரியை சம்பவத்திற்கு முன்னால் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் எதிரியின் பெயர், முகவரி கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியின் பெயர், முகவரி யார் சொல்லி புகாரில் குறிப்பிட்டேன் என்றால் நான் கொடுத்த புகாரில் எதிரியின் பெயர், முகவரி குறிப்பிடவில்லை. நான் சம்பவயிடத்தில் வைத்து எதிரியை பார்க்கவில்லை என்றாலும், இரவு நேரம் என்பதினால் பேருந்து கண்ணாடியை உடைத்த நபரை நான் பார்க்கவில்லை என்றாலும், மறுநாள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்து வைத்திருந்த புகாரில் கையொப்பம் செய்து பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை அடையாளம் காட்ட அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தவில்லை என்றால் சரிதான். பேருந்து நடத்துனரும் புகார் கொடுக்க என்னுடன் காவல்நிலையத்திற்கு வந்தார் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.22 16:32:13 +0530

**தேதி :** 19.05.2026 SC.No. : 539/2025 **PW :2** பத்மநாபன்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவம் நடந்தவுடன் நான் தென்காசி காவல்நிலையம் சென்றோம் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரில் கையெழுத்து செய்தேனா? என்று எனக்கு ஞாபகமில்லை. மறுநாள் காலை 10.00 மணிக்கு எங்கள் அதிகாரிகள் வந்து புகார் கொடுத்தார்கள்.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.22 16:32:19 +0530

**தேதி :** 19.05.2026 SC.No. : 539/2025 PW :3 முத்துராஜ்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சம்பவம் நடந்தவுடன் நாங்கள் காவல்நிலையம் செல்லவில்லை. செங்கோட்டை போக்குவரத்து டிப்போவிற்கு தான் சென்றோம். நான் காவல்நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.22 16:32:25 +0530